## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – மதுரை மாவட்டம் – திரு.மு.இனியன்முத்தணன் த/பெ காலஞ்சென்ற திரு.எம்.முத்தரசன் – கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராக பணிநியமனம் – பணியை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் [பணி–9(2)] துறை**

**அரசாணை (2டி) எண்:98**

**நாள்:13.02.2015**

**படிக்கவும்:**

1. மதுரை மாவட்ட ஆட்சியரின் கடித எண்.ஜி1/7815/2011, நாள்.14.08.2014.
2. கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண். ஆகு2/29993/2014, நாள்.19.09.2014.
3. அரசு கடித எண்.36558/பணி–9(2)/2014–2, வருவாய்த் துறை, நாள்.27.11.2014.
4. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளரின் கடித எண். 8753/சி.டி.பி4/2014, நாள் 30.01.2015.

************

**ஆணை:**

மதுரை மாவட்ட வருவாய் அலகில், கிராம நிருவாக அலுவலராகப் பணியாற்றியபோது 20.12.2002 அன்று காலமான திரு.எம்.முத்தரசன் என்பவரின் மகன் திரு.மு.இனியன்முத்தணன் என்பவர் கருணை அடிப்படையில், பணி நியமனம் கோரி குறிப்பிட்ட காலவரம்பிற்குள் மனு செய்திருந்தார். தமிழ்நாடு அமைச்சுப்பணியில் கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றிருந்ததால் மதுரை மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் தற்காலிக கிராம நிருவாக அலுவலராக நியமனம் செய்யப்பட்டு, தனியர் 19.12.2011 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளதாகவும், திரு.மு.இனியன்முத்தணன் என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், மதுரை மாவட்ட வருவாய் அலகில், கருணை அடிப்படையில் 19.12.2011 முற்பகல் முதல் கிராம நிருவாக அலுவலர் பதவியில் முறையாக வரன்முறை செய்ய ஆணை வேண்டி மதுரை மாவட்ட ஆட்சியர் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் முன்மொழிவு அனுப்பி இருந்தார்.

2. மதுரை மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் ஏற்று மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. மதுரை மாவட்ட ஆட்சியரின் அறிக்கை மற்றும் கூடுதல் தலைமைச் செயலர்/வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை ஆகியவைகள் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டன. காலஞ்சென்ற கிராம நிருவாக அலுவலர் திரு.எம்.முத்தரசன் என்பவரின் மகன் திரு.மு.இனியன்முத்தணன் கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராகப் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளும் பெற்றுள்ளார். கிராம நிருவாக அலுவலர் பணியிடம் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் வருவதால்,

தேர்வாணையத்தின் 1954–ஆம் ஆண்டைய ஒழுங்குமுறைகளில் ஒழுங்குமுறை 16(பி)யின் பிற்பகுதியின்படி திரு.மு.இனியன்முத்தணன் என்பவரை மதுரை மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராக, 19.12.2011 முற்பகல் முதல் முறையாக வரன்முறை செய்வதற்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் தனது இசைவினை அளித்துள்ளது.

4. மதுரை மாவட்ட வருவாய் அலகில் கிராம நிருவாக அலுவலராகப் பணியாற்றி கொண்டிருக்கும் போது 20.12.2002 அன்று மரணமடைந்த திரு.எம்.முத்தரசன் என்பவரின் வாரிசுதாரராகிய அவரது மகன் திரு.மு.இனியன்முத்தணன் என்பவரை தமிழ்நாடு அமைச்சுப் பணியில், மதுரை மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் 19.12.2011 முற்பகல் முதல் தற்காலிக கிராம நிருவாக அலுவலராகப் பணிநியமனம் செய்ததை கவனமாக அரசு பரிசீலனை செய்தது. மதுரை மாவட்ட வருவாய் அலகில் கருணை அடிப்படையில் கிராம நிருவாக அலுவலராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.மு.இனியன்முத்தணன் என்பவரை கிராம நிருவாக அலுவலர் பதவியில் அவர் பணியில் சேர்ந்த நாளான 19.12.2011 முற்பகல் முதல் தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. திரு.மு.இனியன்முத்தணன் என்பவரின் பணி தனியர் ஏற்கனவே பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்படுவதால், நடைமுறையிலுள்ள விதிகளின்படி ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைத் தொகையைப் பெறவும் அவர் தகுதியுடையவராகிறார்.

5. திரு.மு.இனியன்முத்தணன் என்பவர் கிராம நிருவாக அலுவலர் பதவிக்குரிய உடல் தகுதியைப் பெற்றிருக்கிறார் என்பதை மதுரை மாவட்ட ஆட்சியர் உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

6. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா. எண்.26042/க்யூ–2/2014–1, நாள்.17.11.2014–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.வெங்கடேசன்
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
மாவட்ட ஆட்சியர், மதுரை மாவட்டம், மதுரை.
திரு.மு.இனியன்முத்தணன், கிராம நிருவாக அலுவலர், மதுரை மாவட்டம்.
(மதுரை மாவட்ட ஆட்சியர் மூலமாக)
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்
பிரேசர் பாலச்சாலை, சென்னை –3.

<u>நகல்</u>
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
மாநில கணக்காயர்(RAO), தலைமைச் செயலகம், சென்னை–9.
இ.கோ/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
17-2-15.